OS: 509/2018

Date:14.07.2023

பெயர்  : மனோகரன்

**வாதி தரப்பு சாட்சி 1 ஆஜர், சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

<u>**குறுக்கு விசாரணை:**</u>- 5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில்

நான் வழக்கில் 5 ம் வாதி ஆவேன். நான் தாவாவில் மற்ற 1 முதல் 4 வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவா வழக்கிற்கு என்னால்தான் வழக்கு விவரங்கள் கொடுக்கப்பட்டதா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வழக்கில் என்ன பரிகாரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்பது எனக்கு ஞாபகம் உள்ளதா என்றால் உள்ளது. என்ன பரிகாரம் வழக்கில் கேட்டுள்ளோம் என்றால் தாவா சொத்தானது சவுடேஸ்வரி அம்மன் கோவிலுக்கு சொந்தமானது என கேட்டுள்ளோம். இந்த வழக்கானது தாவா சொத்தானது சவுடேஸ்வரி அம்மனுக்கு பாத்தியப்பட்டது கோவிலை தவிர வேறு யாருக்கும் பாத்தியம் இல்லை என்றுதான் வழக்கில் சொல்லியுள்ளோம். இந்த தாவா வாதிகள் கோவிலுக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா அல்லது டிரஸ்டு சார்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் கோவில் சார்பாகத்தான் வழக்கு போட்டுள்ளோம். டிரஸ்டுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை.

இந்த வழக்கு டிரஸ்டில் உள்ள உறுப்பினர்களும் சேர்ந்து இவ்வழக்கு தாக்கல் செய்திருந்தால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய எனக்கு ஆட்சேபனை இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த தாவாவானது அருள்மிகு ராமலிங்கசாமி ஸ்ரீசவுடேஸ்வரி அம்மன் டிரஸ்டின் சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் கோவில் சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த வழக்கானது கோவில் சார்பாக உரிமையில்லாத நபர்கள் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் இவ்வழக்கே தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தானது ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் எங்களுக்கு தெரிந்து கோவிலுக்கு பாத்தியப்பட்டது.

கோவிலுக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்றால் நீண்ட காலமாக கோவில் சொத்தாக இருப்பதால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. எந்த பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்பது தெரியுமா என்றால் தெரியாது.  இது கோவில் சொத்து என்பதை

காட்ட இது விலைக்கு வாங்கப்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. பழைய நிர்வாகிகளுக்கு தான் தெரியும். இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டபோது நான் இவ்வழக்கில் வாதியாக இருந்த நிலையிலும் தாவா சொத்து கோவிலுக்கு எந்த வகையில் சொந்தமானது என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சொத்து கோவிலுக்கு எந்த வகையில் பாத்தியப்பட்டது என்பதை எங்கள் தரப்பில் நிரூபணம் செய்யப்படாத வரையில் நாங்கள் தாவாவில் கோரியுள்ள தாவா சொத்தானது கோவிலுக்கு பாத்தியப்பட்டது என்ற பரிகாரம் எங்களுக்கு கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல.

வழக்கு சொத்தானது கோவிலில் உள்ள நிர்வாகிகள் தர்மகர்த்தா மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது என்றால் சரிதான். வழக்கு சொத்தானது ஒரு டிரஸ்டின் மூலம் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரியல்ல. கோவில் நிர்வாகிகள் மூலம் தான் நிர்வாகம் செய்யப்படுகிறது. இந்த கோவிலின் வருடாந்திர கணக்குகள் உரிய ஆடிட்டர் மூலம் பார்க்கப்பட்டு வருகிறதா என்றால் இல்லை, இந்து சமய அறநிலையத் துறையினரே பார்க்கிறார்கள். இந்து சமய அறநிலைத் துறையினர் கணக்கு வழக்குகள் பார்ப்பதால் தாவா சொத்தில் கோவில் நிர்வாகத்தினருக்கு எவ்வித உரிமையும் ஏற்படுவதில்லை என்று சொன்னால் சரியல்ல. இன்றைய தேதி வரை கோவில் நிர்வாக வரவு செலவு கணக்குகள் அனைத்தும் இந்து சமய அறநிலையத் துறையினரிடம் தான் கொடுத்து வருகிறோம் என்று சொன்னால் சரிதான். இந்த கோவில் இந்து சமய அறநிலையத் துறையினர் கட்டுப்பாட்டிலும், வழிகாட்டுதலின்பேரில்தான் நடந்து வருகிறது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தானது எங்கள் சமூதாயத்திற்கு மட்டும் பாத்தியப்பட்டது அல்ல, ஆகவே நாங்கள் தாவா சொத்தில் விளம்புகை பரிகாரம் கேட்கமுடியாது என்று சொன்னால் சரியல்ல.

தாவா சொத்தானது அறநிலையத் துறையினரும் வரவு செலவு கணக்குகளை பார்த்து வருவதால் அவர்களையும் இவ்வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்றும், அதனால் இவ்வழக்கு தள்ளுபடியாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**(குறுக்குவிசாரணை பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க தொடர்ச்சியாக ஒத்திவைக்கப்படுகிறது.)**

ஒப்பம்/-PW1
ஒப்பம்/-சார்பு நீதிபதி, ஓமலூர்.